Email: papdtnmk p9
Date: 7/12/15
Time: 2:55 PM

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
8 DEC 2015
பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம்

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள்,**
**ஆணை பிறப்பிப்பவர் :- திரு.மா.லீலாகுமார்,**

**ந.க.எண். நி3/4707/2013** **நாள். 04.12.2015**

பொருள் :- தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – நாமக்கல் மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013–14ம் ஆண்டிற்கு தட்டச்சர் பதவிக்கு நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – முகமது அன்வர்தீன் (திரு) ஆர், தட்டச்சர், பள்ளிபாளையம் வட்டாரம் – பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்க :- தொடர்புடைய ஆவணங்கள்.

❖❖❖

ஆணை :-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால், தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதி நான்கின் கீழ் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் வெற்றி பெற்று, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதின் பேரில், நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் வட்டாரத்தில் தட்டச்சராக தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்க்காணும் பணியாளருக்கு அவருக்கு எதிரே கலம் 4ல் கண்டுள்ளவாறு தட்டச்சர் நிலையில் பணியினை வரன்முறை செய்தும், ஈராண்டு கால தகுதிகாண்பருவ காலத்தினை துவக்கியும் இதன் வழி ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | பணியாளரின் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள். | பணி வரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.ஆர்.முகமது அன்வர்தீன்,<br>தட்டச்சர்,<br>பள்ளிபாளையம் வட்டாரம். | 27.01.2015 மு.ப., | 27.01.2015 மு.ப., |

2. இவரது பணிவரன்முறை ஆணையானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2013–14ம் ஆண்டு தொகுதி நான்கில் அடங்கிய பதவிகளுக்கு பணி நாடுநர்கள் தெரிவு தொடர்பாக சென்னை / மதுரை உயர் நீதிமன்றங்களில் நிலுவையிலிருக்கும் வழக்குகளில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புகளுக்குட்பட்டதாகும்.

திருப்புக . . . .

3. தனியர், தனது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக, அவரது பணி நியமன ஆணையில் தெரிவிக்கபட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான அனைத்து துறைத் தேர்வுகள் மற்றும், தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தால் நடத்தப்படும் CERTIFICATE ON OFFICE AUTOMATION தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும்.

4.அரசாணை எண். 16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள். 21.02.2002ன்படி, இவர், உதவியாளராக பதவி உயர்வு பெற, தட்டச்சர் பணிக்கு குந்தகமில்லாமல் ஓராண்டுகால இளநிலை உதவியாளர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இதன் விபரங்கள் பணிப்பதிவேட்டில் தவறாது பதியப்பட வேண்டும்.

5. இவ்வாணை தொடர்பாக தனியரது பணிப் பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு, அதற்கான சான்றினையும் (பணிப்பதிவேடு தொகுதி எண். மற்றும் பக்கம் எண். விவரத்தினை உள்ளடக்கி), பணிப்பதிவேட்டின் நகலினையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க பள்ளிபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (வ.ஊ) தெரிவிக்கப்படுகிறது.

4/12/15

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
நாமக்கல்.

04.12.15

பெறுநர்

திரு.ஆர்.முகமது அன்வர்தீன்,
தட்டச்சர்,
பள்ளிபாளையம் வட்டாரம், (அலுவலகம் மூலமாக).

நகல்

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), பள்ளிபாளையம் வட்டாரம்,
2. நி3 இருக்கை இருப்பு கோப்பிற்கு.

ந.க.எண். 193/2015/அ  பள்ளிபாளையம் வட்டாரம்.
நாள். 08.12.2015

நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். நி3/4707/2013, நாள். 04.12.2015 சார்வு செய்யப்படுகிறது.